DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 133 / 2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW -10

LW -12

Name : அண்ணாமலை

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 25.02.2026

1. **( A1 present through V.C A2, A4, A6 present. A3, A5 absent 317 crpc petition filed and allowed)**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகிரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். சிவகிரி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது கடந்த 16.09.2016 ம் தேதி 14.00 மணிக்கு நானும், என்னுடன் பணியாற்றிய காவலர் இளையராஜா என்பவரும் காவல் ஆய்வாளர் அவர்களுடன் சிவகிரி காவல் நிலைய கு.எண். 160/2016 ச.பி. 392, 506(2) IPC வழக்கின் எதிரியை தேடி தென்மலை அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் செல்லும்போது போலிஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவர்களை மடக்கி பிடித்து விசாரிக்க முதலில் முன்னுக்கு பின் முரணாக கூறியவர்கள் இறுதியாக தனது உண்மையான முகவரியாக திருநெல்வேலி டவுணை சேர்ந்த சீனி மாரியப்பன் என்றும், மற்றொரு நபர் கோவில்பட்டி வீரவாஞ்சி நகர், Now at திருநெல்வேலி

கார்த்திக் என்று கூறியவர்களை தொடர்ந்து விசாரிக்க குற்றத்தை ஒப்புக்கொண்டு நடந்த சம்பவத்தை கூறியதால் காவல் ஆய்வாளர் அவர்கள் கைது செய்தார்கள். அப்போது அந்த வழியாக வந்த வாளை குருசிவன் மற்றும் சுப்புராஜ் ஆகியோர்களிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு ஆஜர் சாட்சியாக இருக்க சம்மதம் தெரிவித்தால் ஆஜர் சாட்சிகள் முன்பு காவல் ஆய்வாளர் அவர்கள் சீனி மாரியப்பன் மற்றும் கார்த்திக் என்பவரிடம் எவ்வித அச்சுறுத்தலோ, ஆசைவார்த்தைகளோ, துன்புறுத்தலோ இன்றி ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் சீனி மாரியப்பன் மற்றும் கார்த்திக் என்பவர்கள் சித்தி, பெரியம்மா மகன்கள் என்றும், இருவரும் அண்ணன், தம்பி உறவு முறை என்றும், அவருக்கு ஏற்கனவே பழக்கமான வேலு என்ற வேலாயுதம் நண்பர்கள் என்றும், அவர்கள் ஏற்கனவே வழிப்பறி வழக்கு உள்ளது என்றும், அவர்கள் அவர்களது நண்பர்களுடன் மதுரைக்கு செல்லும்போது திருமங்கலம் - விருதுநகர் மெயின் ரோட்டில் பொலிரோ வாகனத்தை நிறுத்தி தண்ணி அடித்து தார்பாய் விரித்து துாங்கி கொண்டு இருந்தவர்களிடம் கத்தி, அருவாளை காட்டி மிரட்டி பொலிரோ வாகனத்தை பிடுங்கியதாகவும், அதன் பின்பு அவர்கள் அந்த பொலிரோ வாகனம் மற்றும் ஒரு இருசக்கர வாகனத்தை 26.08.2016 ம்தேதி இரவு சங்கரன்கோவில் - ராஜபாளையம் மெயின் ரோடு டி ரெட்டியார்பட்டி ரோட்டிற்கு மேற்கே தனியாக உள்ள ஒரு வீட்டில் சுமார் இரவு 8.30 மணிக்கு சுவர் ஏறி குதித்து அங்கு இருந்த ஒரு பெரியவரிடம் அருவாளை காட்டி மிரட்டி அங்கு நகை மற்றும் பணம் , 3 சாதா செல்போன், ஒரு ஆண்ட்ராய்டு போன் ஆகியவற்றை கொள்ளை அடித்து சென்றதாகவும், அந்த சம்பவத்தின்போது சுடலை மணி பொலிரோ வாகனத்தில் இருந்ததாகவும், அதன் பின்பு மீண்டும் 16.09.2016 ம் தேதி இராமசந்திரா நாயுடு காலேஜ் அருகில் இரு சக்கர வாகனத்தில் வந்த ஒருவரிடம் சீனி மாரியப்பன் மற்றும் கார்த்திக் என்பவர்கள் லிப்டு கேட்டு ஏறியதாகவும், வாகனத்தில் செல்லும் போது ஒரு பெரிய கத்தியை காட்டி மிரட்டி அந்த நபர் சட்டைப் பையில் இருந்து ரூ. 300/- ஐ பறித்ததாகவும், ஆள்களை பார்த்தவுடன் வாகனத்தை ஓட்டியவர் சத்தம்போடவும்,

அங்கு இருந்தவர்கள் பிடிக்க முற்பட்டபோது பெரிய அருவாள் மற்றும் கத்தியை காட்டி மிரட்டி ஓடி தப்பி விட்டதாகவும், தங்களுக்கு ஏற்கனவே கோவில்பட்டி, கயத்தாறு, செயின் பறிப்பு மற்றும் மோட்டார் வாகன திருட்டு வழக்கு உள்ளதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதன் பின்பு சுமார் 3.30 மணியளவில் சீனிமாரியப்பன் என்பவர் சிவகிரி காவல் நிலைய கு.எண். 160/2016 வழக்கில் சம்மந்தப்பட்ட ஒரு பெரிய மரக்கைப்பிடியுடன் கூடிய வாள் ஒன்றையும், கொம்பு கைப்பிடியுடன் கூடிய ஒரு பெரிய அருவாளையும், கருப்பு நிற டிராவல் பேக் ஒன்றையும் எடுத்து ஆஜர் செய்தார். அதனை ஆய்வாளர் அவர்கள் சாட்சிகள் முன்பு அத்தாட்சி மூலம் கைப்பற்றினார்கள். 4.00 மணியளவில் சிவகிரி காவல் நிலைய கு.எண். 153/2016 வழக்கில் சம்மந்தப்பட்ட தாகவும், 4 பவுன் தங்க தாலிசெயின் ஒன்றையும், 1 பவுன் எடையுள்ள வளையல் -1 ஜோடியும், 2 கிராம் எடையுள்ள சிறுபிள்ளை பிரேஸ்லெட், 3 சாதாரன வகை போன், ஒரு ஆண்ட்ராய்டு போன் மற்றும் ரூ. 5000/- பணம் எடுத்து ஆஜர் செய்ததை அத்தாட்சி செய்து சாட்சிகள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றினார். எதிரி கார்த்திக் 16.00 மணிக்கு சிவகிரி காவல் நிலைய கு.எண். 160/2016 வழக்கில் சம்மந்தப்பட்ட ஒரு பெரிய கொம்பு கைப்பிடியுடன் கூடிய கத்தி, மற்றும் ரூ.ே 300 பணம் எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்பு அத்தாட்சி செய்தும், காவல் ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றினார்கள். எதிரிகளை கைது செய்து நிலையம் கொண்டு சென்று காவல் ஆய்வாளர் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றும், அத்தாட்சி மூலம் நிலையம் கொண்டு வர உதவியாக இருந்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு சிவகிரி காவல் நிலையத்தில் இருந்து சுமார் 13.00 மணிக்கு கிளம்பி 14.00 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 9 கிலோ மீட்டர். சம்பவ இடத்திற்கு ஜீப்பில் தான் சென்றேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில்

என்னை தவிர, யார் யார் இருந்தார்கள் என்றால் என்னுடன் வந்த காவலர் இளையராஜா, காவல் ஆய்வாளர், அப்போது அந்த வழியாக வந்த அத்தாட்சி சாட்சிகள். 1,2 எதிரிகளை யார் பிடித்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 1,2 எதிரிகளுக்கு இந்த ஊருக்கு அருகில் உள்ள ஊர் எதுவும் கிடையாது என்றால் சரிதான். சாட்சிகள் வாளை குருசிவன் மற்றும் சுப்புராஜ் என்பவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் ரெட்டியப்பட்டியை சேர்ந்தவர்கள். வாளை குருசிவன் மற்றும் சுப்புராஜ் என்பவர்கள் எதற்காக அந்த வழியாக வந்தார்கள் என்று நாங்கள் கேட்டுக்கொள்ளவில்லை என்றல் சரிதான். 1,2 எதிரிகள் கு.எண். 160/2016 வழக்கில் எதிரிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் சாட்சியாக இருக்கிறேனா என்றால் சாட்சியாக இருக்கிறேன். மேற்படி வழக்கில் என்னை சாட்சியாக போடுவதற்கு தனிப்பட்ட காரணம் ஏதும் உண்டா என்றால் இல்லை. கு.எண். 160/2016 வழக்கில், இந்த வழக்கில் உள்ள ஒப்புதல் வாக்குமூலம் பற்றி சொல்லியுள்ளீர்களா என்றால் அந்த வழக்கில் நான் சாட்சி கிடையாது. இந்த வழக்குக்கு முன்பாக 1, 2 எதிரிகளை பார்த்தது கிடையாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து எதிரிகளை கைது செய்தபோது எதிரிகள் கையெழுத்து செய்தார்களா என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தார்கள். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எத்தனை கையெழுத்து செய்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் சம்பவ இடத்திலேயே கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அ.சா.ஆ.10 ஒப்புதல் வாக்குமூலம் கார்த்திக் என்பவருடையது தானா என்றால் சரிதான். அ.சா.ஆ.9 ஒப்புதல் வாக்குமூலம் சீனிமாரியப்பன் என்பவருடையது தானா என்றால் சரிதான். மேற்படி அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஒப்புதல் வாக்குமூலம் டைப் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து டைப் செய்யப்பட்டது என்றால் அங்கே வைத்து தான் டைப் செய்யப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தை டைப் செய்தவர்கள் யார் என்றால் ஞாபகம் இல்லை. நான் சிவகிரி காவல் நிலையத்தில் என்னுடைய ஆய்வாளருக்கு கீழே தான் பணியாற்றினேன் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் நான் சாட்சி சொல்லமுடியும் என்றால் சரியல்ல. அவருக்கு விரோதமாக சாட்சி சொல்ல முடியாது என்றால் சரியல்ல. அத்தாட்சி எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் வைத்து எழுதப்பட்டது. அத்தாட்சியை யார் பிறப்பித்தார்கள் என்றால் ஆய்வாளர் தான் எழுதினார். நான் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த வழக்கில் உள்ள ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவ இடத்தில் வைத்து 1, 2 எதிரிகளை கைதுசெய்திருந்தால் சம்பவம் பற்றி நன்கு தெரியும் என்றால் சரியல்ல. ஆனால் 1, 2 எதிரிகளை கைது செய்யாமல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் அலுவலகத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து சாட்சியாக சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகளும் வெவ்வேறு ஊரை சேர்ந்தவர்கள் என்றால் திருநெல்வேலியை சேர்ந்தவர்கள். 1, 2 எதிரிகள் மீது வேறு வேறு காவல் நிலைங்களில் வழக்குகள் உண்டு என்றால் சரிதான். இந்த வழக்கானது புள்ளிவிவரங்களுக்காக பதியப்பட்ட வழக்கு என்றாலும், இந்த வழக்கில் உள்ள எதிரிகள் ஒவ்வொரு வழக்கிலும் உள்ள 2 எதிரிகளை எடுத்து இந்த வழக்கிற்காக பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரத்தில்,

எதிரிகளை கைது செய்ததாக சொல்வதும், அத்தாட்சி பிறப்பித்ததாக சொல்வதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 1, 2 எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.